பாடம் : சித்திரக்கலை

வாரம் : ஆகஸ்ட் 02

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

**தேர்ச்சி** : **உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக (வரைவியல்) "கிராபிக் ஆக்கங்கள் படைப்பார்"**

**தேர்ச்சி மட்டம்** : **"சிறுவர் கதையொன்றில் தெரிவுசெய்த நிகழ்வொன்றுக்கான விளக்கப்படத்தை நிர்மாணிப்பார்"**

**செயற்பாடு** : **'சிறுவர் கதையொன்றில் தெரிவுசெய்த நிகழ்வொன்றுக்கான விளக்கப்படத்தை வடிவமைப்போம் '**

**ஒப்படை** : **பின்வரும் அறிவுறுத்தல்களை பின்பற்றுக.**

01. உங்கள் வீட்டிலுள்ள அல்லது தொலைக்காட்சி, இணையம் போன்ற கட்புல சாதனங்கள் போன்றவற்றில் சிறுவர் கதைப்புத்தகங்கள் சிலவற்றைப் பெற்று அதிலுள்ள விளக்கப்படங்களைப் பார்வையிடுங்கள்.

02. நீங்கள் பார்வையிட்ட சிறுவர் கதைப்புத்தகங்களில் காணப்படும் கதைக்குப் பொருத்தமான விளக்கக் காட்சிப் படத்தின் பொருத்தம், வசனங்களும் ஓவியங்களும், கவர்ச்சிகரமான பூரணப்பாடு என்பவற்றை நன்கு அவதானியுங்கள்.

03. நீங்கள் அவதானித்தக் கதையை அல்லது வேறு கிராமியக் கதையொன்றை தெரிவு செய்துக் கொள்ளுங்கள். விளக்கப்படத்திற்காக தெரிவு செய்யப்பட்ட நிகழ்வுக்குப் பொருத்தமான உருவங்கள், வடிவங்கள், சுற்றுப்புறச் சூழல் தொடர்பான தகவல்களை கோவைப்படுத்திக் கொள்ளுங்கள்.

04 நீங்கள் திட்டமிட்டுக்கொண்டதை சுவட்டுப்பிரதித் தாள்களை உபயோகித்து வரைதற் தாளில் அதனை பிரதியிட்டுக் கொள்க

05 உருவங்கள் தெளிவாக தெரியும் விதத்தில் திரும்பவும் பென்சிலால் அவற்றை வரைந்துக் கொள்ளுங்கள். தேவையான இடங்களில் வெளிப்புறக்கோடுகளை கடும் நிற இரேகைகளால் வரைக. மனங்களைக் கவரும் விதத்திலான வர்ணங்களை தீட்டி சிறுவர் கதையொன்றுக்கான விளக்கப் படத்தினை வடிவமைக்குக.